3—

தமிழ் மென்பொருள்

***31371—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் தேடு மென்பொருள் கண்டுபிடிக்க அரசு என்னென்ன நடவடிக்கையினை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் தேடு மென்பொருள் அண்ணா பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழக அறிவு தகவு ஆராய்ச்சி மையத்தின் (Anna University – Knowledge Data Centre) இணையதளத்தில் இடப்பட்டுள்ளது.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினி இணையதளத்தில் தேடி, வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கு, ஆங்கிலத்தில் Yahoo, Google என்ற தேடு மென்பொருள் பெரும்பாலோரால் பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று, தமிழிலும் உலகத் தகவல்களை அறிந்துகொள்ள தமிழ் தேடு மென்பொருள் தமிழக அரசின் இணையதளத்தில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் இணைய மாநாட்டு i.e., T.I.–2003. வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டை சென்னையிலே நடத்தி, தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்கின்ற ஒரு கொள்கையோடு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னித் தமிழ், கணினித் தமிழிலும் உருவாகவேண்டும் என்கின்ற வகையில் தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியை ஏற்படுத்தி, அந்த நிதியின்கீழ் பல்வேறு மென்பொருட்களை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே மென்பொருட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை 2, 3 தலைப்புகளாக நாம் பிரிக்கும்போது, நிறைவேற்றப்பட்ட மென்பொருட்கள், நடந்தேறி வரும் மென்பொருட்கள் குறித்த திட்டங்கள், சான்று அளிக்கப்பட்ட தமிழ்

2006 ஜனவரி 17]

மென்பொருட்கள், சோதனையில் உள்ளவை என்கின்ற அந்தத் தலைப்புகளில் சொல்லும்போது, இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கணினியிலே தமிழ் மென்பொருளை உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்காக, இரண்டு நிமிடங்கள் ஆனாலும்கூட, அதைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

Windows–க்குரிய தமிழ் இடைமுகம்– i.e., Tamil Interface to MS–Windows, தமிழ் எழுத்துரு அறிவி–Tamil Optical Character Recognition, தமிழ் இணையத் தள உலாவி–அதாவது, Web Browser, இயந்திர உதவியுடன் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்–Machine–aided English to Tamil Translation. தமிழில் பேச்சு உருவாக்கம், Speech Synthesizer in Tamil, தமிழில் வின்டோஸ்–Localising Windows, Tamil Word Net to enhance machine translation—இயந்திர மொழிபெயர்ப்பை மேம்படுத்தும் தமிழ்ச் சொல்வலை, Tamil Linux, தனியாள் கணினி, அதாவது,Tamil Linux PC, இவையெல்லாம் நிறைவேற்றப்பட்ட மென்பொருட்கள்.

நடந்தேறி வரும் திட்டங்கள், அதாவது, மென்பொருள் குறித்து நடைபெற்று வருகின்ற மென்பொருள் குறித்த திட்டங்கள். Java based Tamil Text to Speech Synthesizer, ஜாவா அடிப்படையிலான தமிழ்ப் பேச்சுருவாக்கி; Tamil Database Management Package–தமிழ் தகவுதள மேலாண்மைப் பொறி, தமிழ்க் கையெழுத்து அறிந்துகொள்ளும் எழுத்துரு அறிவி மென்பொருள் பகுதி–I–i.e., Optical Character Recognition for handwritten Tamil Text, தமிழ்ப் பேச்சிலிருந்து தமிழ்ப் பண்கள் உருவாக்கம்–Speech to Text Synthesizer in Tamil, செல் பேசியில் தமிழ்ப் பயன்பாட்டிற்காக Linux–ல் தகவல் அமைத்தல்–Linux localisation in mobile phones, மின்னணு அகராதி, அதாவது, Development of Electronic Dictionary, வட்டார மொழிகளை கைச்சாதனங்களில் (hand–held devices) பயன்படுத்த வலிமை சேர்த்தல்–Value added services in regional languages in hand–held devices; சான்றளிக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள் என்று சொல்லும்போது சில தனியார் நிறுவனங்கள் அவர்கள் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற வகையிலே மென்பொருளை அவர்கள் உருவாக்குகின்றபட்சத்திலே, தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அது சிறந்த மென்பொருள் என்று சான்றளிக்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளது.

அந்த அடிப்படையிலே சான்றளிக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள், சுரபி, தமிழ் இடைமுகப்புத் தளம், சங்கப் பலகை,

[2006 ஜனவரி 17

தமிழ் விசைப் பலகை, Tamil Word 2001, Ankur–Tamil '99 சொல் செயலி, Ponvizhi, அதாவது, ஒளிவழித் தமிழ் எழுத்துரு அருவி, Indoword, தமிழ்ச் சொல் செயலி, Windik, தமிழ் அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், Shakthi Tamil அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், Ankur பன்மொழி அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள், TVSS–E MSP 455 XL Classic அச்சுப்பொறி, Web HQ 107, அதாவது, அச்சுப்பொறி Windows XP மற்றும் Linux எழுத்துரு மற்றும் சோதனையில் உள்ளவை என்று சொல்லும்போது, Epson LQ 300, இதுபோன்ற பல்வேறு தமிழ் மென்பொருட்கள் நிறைவேற்றப்பட்டு, இப்போது ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு எவரெவர் தயாரிக்கின்றார்களோ. அவர்களுக்குச் சான்றளிக்கப்பட்டு, கன்னித் தமிழைக் கணினித் தமிழாக உருவாக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் முயற்சி எடுத்து, இன்றைக்கு உலகம் முழுவதும் தமிழைக் கணினியிலே அறியக்கூடிய வகையில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–25

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து, இந்தியாவில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உருவாக்கியுள்ளதை இந்தியாவின் குடியரசுத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் அம்மாவின் அரசைப் பாராட்டி, நற்சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளார்கள். அதேபோன்று, தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு, சாதி, மதக் கலவரம் மற்றும் வெடிகுண்டு சப்தமில்லாத மாநிலம் தமிழ்நாடு என்று மேதகு ஆளுநர் அவர்களும், வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அம்மாவின் அரசைப் பாராட்டுகின்ற இந்த நல்ல தகவல்களை கிராமப்புற மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் கணினிமூலம் விவரங்களை அளிக்க அரசு என்ன திட்டம் வைத்துள்ளது, எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டதைப்போல, இத்தகைய மென்பொருட்கள் உருவாக்கப்படும்போது, நிச்சயமாக எல்லாக் கிராமங்களிலும் கன்னித் தமிழ், கணினித் தமிழிலே உருவாக்கப்பெற்று, பாமர மக்களும் கணினி

2006 ஜனவரி 17]

மூலமாகத் தமிழை அறிய முடிகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவேதான், அரசு இதற்கு 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மென்பொருள் குறித்த விவரங்களை மொழியாக்கம் செய்து, திண்டுக்கல் துரைப்பாண்டியன் என்கின்ற இளைஞர் குறுந்தகடாக வெளியிட்டிருக்கிறார். மதுரை பத்திரிகையாளர் கழகம் அதனைப் பாராட்டி வெளியீடு செய்திருக்கிறது. இதுபோன்ற இளைஞர்களுடைய முயற்சிக்கு ஊக்கம் தருவதற்கான சிறப்புத் திட்டம் உண்டா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அவர்களை ஊக்கப்படுத்தும். அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை அணுகினால், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

4—

நியாய விலைக் கடை

***5446—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் சில நியாய விலைக் கடைகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ள கடைகளைப் பிரித்துத் தனியாக நியாய விலைக் கடையை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப